www.tamilarangam.net

...த்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

# நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் புலிகளால் படுகொலை.


**ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் வாலிபர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இயக்கங்கள் தடைசெய்யப்பட்டபின் சாதாரண வாழ்க்கைக்கு திரும்பியிருந்த இவர்கள் தமது தனித்தலைமைக்கு இடையூறாக இருப்பார்கள் என்று புலிகள் கருதியதாலேயே மேற்படி படுகொலைகள் இடம் பெற்றுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.**

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளின் விசா கெடுபிடி நிறுத்தப்பட்டதை தொடர்ந்து கொழும்பு வந்தவர்களின் செய்திகளை மேற்கோள் காட்டி கொழும்பில் இந்த செய்தி வெளிவந்துள்ளது. கடத்தப்பட்டு கொல்லப்பட்டோரில் பலர் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. ஆனாலும் டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப், தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை, தமிழ் தேசிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினர்களும் கடத்தப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு கடத்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் பெற்றோர்கள் திருநெல்வேலிக்கு அழைக்கப்பட்டு அங்கு அவர்களின் பிள்ளைகள் கொல்லப்பட்டதாக பெயர் பட்டியலை வாசித்ததாகவும் இச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி கொலை செய்யப்பட்ட சிலரின் உடல்கள் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர்களின் இறுதிக் கிரியைகள் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது குறித்து பிரச்சனைகள் எழக்கூடாது என்றும் புலிகள் பெற்றோரை மிரட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

புலிகள் நான்காயிரம் பேரை முன்பு துணுக்காயில் கைது செய்து வைத்திருந்தனர். தற்போது அந்த முகாம் சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. ...ங்கள் உறவினர் பற்றி விசாரிக்க சென்ற பலரிடம் பங்கர் வெட்டும் போது ஷெல் விழுந்து இறந்து விட்டதாக கூறப்படுகிறது.

இருப்பினும் கப்பம் வேண்டுவதற்காக கடத்தப்பட்ட பொதுமக்கள் கப்பத்தை கொடுத்தபின் விடுவிக்கப்படுவதாகவும் அறியப்படுகிறது.




## தமிழ் கனடியர்கள் வீட்டிலும் கப்பம்

### கனடாவில் சேர்க்கும் பணம் எங்களுக்கு கிடைப்பதில்லை..

### யாழ்.பொறுப்பாளர் பானு

தற்போது கனடாவில் வசிப்பவர்களின் வீட்டாரிடம் புலிகள் கப்பம் வாங்கி வருகின்றனர். கனடாவில் உறவினர்கள் உள்ள வீட்டாரிடம் ஒரு லட்சம் தொடக்கம் ஐந்து லட்சம் வரை அறவிடப்படுகிறது. இங்கும் புலிகளுக்காக பிரபாகரனின் கையெழுத்து என்று கூறப்படும் கையெழுத்துடனான ஒரு ரசீது வழங்கி பணம் சேகரிக்கப்படுவது தெரிந்ததே. இங்கு மாதாந்தம் 150 டொலர் வீதம் புலிகளுக்கு பணம் வழங்கு... ஒருவரின் வீட்டாரிடமும் ஐந்து லட்சம் தரும்படி புலிகள் வற்புறுத்தியிருக்கின்றனர். இங்கு வசிப்பவரின் சகோதரர் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் பானுவிடம் சென்று தனது சகோதரர் கனடாவில் மாதாந்தம் 150 டொலர் கொடுப்பதாக தெரிவித்தபோது கனடாவில் இருந்து ஒரு சதம் கூட தங்களுக்கு கிடைப்பதில்லை என்றும் அங்கு கொடுத்தால் என்ன? கொடுக்காவிட்டால் என்ன? தாங்கள் கேட்ட பணத்தை தரும்படி பானு அவரிடம் தெரிவித்துள்ளார். இந்த பானு தான் கோட்டைக்குள் சென்று கொடிநாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

EPIC (U.K. Branch)
B M BOX 1738
LONDON WC1N 3XX

## டென்மார்க்கில்

## உண்டியல்காரர்கள் பொலிசாரால் கைது

(டென்மார்க்)

தமிழ் அகதிகளிடம் வலுக்கட்டாயமாக நிதிசேகரித்த குற்றத்திற்காக புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆதரவாளர்கள் ஏழு பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் 3000 குரோனர்கள் தர மறுத்தவர்களின் உறவினர்கள் யாழ்பாணத்தில் கொலை செய்யப்படுவர் என பயமுறுத்தியதை அடுத்து சில தமிழ் அகதிகள் பொலிசாரிடம் முறையிட்டதன் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக கைது செய்யப்பட்டவர்கள் சிலரிடம் பெருமளவு பணம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டதாகவும் இந்தியாவிலும் இலங்கையிலும் இவர்களின் சில உறவினர்களுக்கு வங்கிகளினூடாக அனுப்பப்பட்ட பணத்திற்கான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கைதானவர்களுக்கும் போதைப் பொருள் விநியோகஸ்தர்களுக்கும் தொடர்பு உண்டா என்பது பற்றி சர்வதேச இன்டர்போல் புலனாய்வுத் துறையினர் விசாரணை செய்து வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குமரப்பா, புலேந்திரன் தற்கொலே:
# சில தகவல்களும் சில சந்தேகங்களும்

கைது செய்யப்பட்ட 17 புலிகள் சயனேட் அருந்தி மாண்டு போன நிகழ்ச்சியே மத்தியஸ்தம் வகித்துவந்த ராஜீவ் காந்தியை புலிகளுடன் மோத வைத்த நிகழ்ச்சி எனவும் ராஜீவ் காந்தி இலங்கை அரசுக்கு சாதகமாக நடந்து கொள்ள வைத்த தகர்வு என்றும் முன்னுள் ஜனுதிபதி ஜே.ஆர் கூறியுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளுடன் தொடர்பு உள்ள மக்கள், புலிகள், இலங்கை இராணுவம், இநதிய அமைதிப்படை, ஒரு மூத்த இலங்கை அமைச்சர் ஆகியோரிடம் இருநது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொகுத்து நடந்த சம்பவம் பற்றி பின்வரும் தகவல்கள் கொடுக்கப்பட்டன.

87 ஒக்டோபர் 2ம் திகதி பாக்குநீரிணேயில் ரோந்துக்காக நின்ற இலங்கைக் கடற்படைப் படகுக்கு தகவல் ஒன்று கிடைத்துள்ளது. கடற்படைப் பகுதியினரின் தகவல்படி இந்திய இராணுவமே தகவல்களே கொடுத்துள்ளது. ரோந்துப் படகு ஒன்று உடனடியாக அந்தப் பகுதிக்கு சென்று வேக விசைப்படகு ஒன்று இலங்கைக்குள் நுழைய முயன்று கொண்டிருந்ததை கண்டு அப்படகை கடற்படை துரத்திச் சென்று பிடித்த போது அந்தப் படகில் கனரக துப்பாக்கி பொருத்தப்பட்டிருந்தது. தமிழ் தீவிரவாதிகள் இருப்பதாக கடற்படையினர் நினேத்தனர். சரணடையும்படி கூறியபோது எதுவித எதிர்ப்புமின்றி ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சரணடைந்தனர்.

ஆனுல் கைதானவர்கள் மிகப் பெரிய புலிப்பிரமுகர்கள் என்று அந்த கடற்படையினர் அறிந்திருக்கவில்லே. காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்த பின்தான் புலேந்திரனே ஒரு இராணுவ வீரன் அடையாளம் கண்டு கொண்ட பின்தான் அவர்களின் பெறுமதி புரிந்துள்ளது. கித்துலொத்துவவில் வைத்து பஸ் வண்டிகளே மறித்து 126 சிங்கள மக்களே புலேந்திரன் தலைமையிலான புலிகளே கொன்றனர்.

புலேந்திரனும் மட்டுநகர் பொப்பாளர் குமரப்பாவும் இராணுவ அதிகாரியான ஜயந்த ஜயரத்தினவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சயனேட் குப்பிகள் அகற்றப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். திலிப் யோகியின் தகவல்படி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என தாங்கள் நம்பியதாக தெரிவித்தார்.

இந்த தகவலே மேலிடத்துக்கு பிரிகேடியர் ஜயந்த ஜயரத்தின அறிவித்தவுடன் விசேட விமானம் மூலம் அவர்களேக் கொழும்புக்கு கொண்டு வர இருப்பதாக மேலிடம் அறிவித்தது இந்த தகவலே அறிந்த புலிகள் தலைமை பொதுமன்னிப்பு அமுலில் உள்ளதால் தங்கள் சகபாடிகளே விடுவிக்கும்படி இந்திய அமைதிப் படை தளபதி றொட்றிகசிடம் கோரினர்.

றொட்றிக்ஸ் அந்த கைதிகளே விடுவிக்கும்படியும் அலலது தம்மிடம் ஒப்படைக்கும்படி விடுத்த கோரிக்கைக்கு அவர்களேக் கொழும்புக்கு அனுப்பப் போவதாகவும் கூறினுர். அத்துடன் புலிகளின் அன்டன் பாலசிங்கம் உட்பட சில முக்கியஸ்தர்களே அந்தக் கைதிகளே பார்வையிட அனுப்ப சம்மதிப்பதாகவும் அநத இராணுவ அதிகாரி இந்திய அதிகாரிக்கு கூறியுள்ளார்.

அந்தக் கைதிகளின் காவல் கடமைக்கு இநதிய வீரர்கள் கடமைக்கு அனுப்பப்படுவதாக கூறப்பட்டதற்கு சிங்கள இராணுவத்தினரிடம் இருந்து பத்து யார் தொலேவில் நிற்க அனுமதிக்கப்பட்டனர்.

சிறிது நேரத்தில் மூவாயிரம் பெண்களும் சிறுவர்களும் பலாலி ராணுவ முகாமை நோக்கி ஊர்வலமாக வந்து பதினேழு புலிகளேயும் விடுவிக்கும்படி ஆர்ப்பாட்டமாக கோரிக்கை விடுத்தனர்.

றொட்றிக்ஸ் மீண்டும் பிரிகேடியர் ஜயரத்தினவின் அலுவலகம் சென்று அவர்களே விடுவிக்கும்படி கோரினர். "நீங்கள் அவர்களேக் கொழும்புக்கு அனுப்பினுல் இந்த மக்கள் கூட்டம் தடைகளேயும் மீறி இராணுவ முகாமுக்குள் பிரவேசிக்கும். இதனே எப்படி நாம் தடுப்பது? பெண்களேயும் குழந்தைகளேயும் சுட்டுக் கொல்ல எம்மால் முடியாது" என்றுகூறியதற்கு மேலிடத்து ஆணே அது என்றும் இலங்கை இராணுவ அதிகாரி கூறினுர்.

விமானம் நின்ற இடத்துக்கு இந்திய ராணுவ அதிகாரி சென்ற போது அவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. பதினேழு புலிகளும் சயனேட் அருந்தி விட்டதாக தெரிவிக்கப்பட்டது. கொழும்புக்கு தம்மை அனுப்பினுல் தாம் சயனேட் அருந்தப் போவதாக எச்சரித்ததாகவும் கூறப்பட்டது. அவர்களேப் பார்க்க வந்த புலிகளே சயனேட் குப்பிகளேக் கொடுத்துள்ளனர்.

இத்தகவலே கொழும்புக்கு ஜயரத்தின தெரிவித்தார். ஆயினும் அவர்களே உடனடியாக கொழும்புக்கு அனுப்பும்படி கோரப்பட்டது.

அப்போது அங்கு வந்த இந்திய இராணுவ அதிகாரி "அவர்களே கொழும்புக்கு அனுப்ப வேண்டாம், அவர்கள் மரணமடைந்தால் பெரும் ரத்தக் களரி ஏற்படும்" என்று கூற அவர்களே கொழும்புக்கு அனுப்புவேன் என்று ஜயரத்தின பிடிவாதமாக கூறினுர். "இங்கு தற்போது நீர் தான் பொறுப்பாக உள்ளீர். நடைபெறும் சகல விடயங்களுக்கும் நீரே பொறுப்பேற்க வேண்டும்" எனறும் றொட்றிக்ஸ் எச்சரித்தார்.

[illegible] மறுத்த போது அவர்களே கொழும்புக்கு அனுப்புவதை பன்னிரண்டு மணி நேரத்துக்கு ஒத்தி வைக்குமாறும் டிக்சித் டில்லியில் இருந்து கட்டுநாயக்காவுக்கு வருவதாகவும் ஜனுதிபதியுடன் பேசி இக்கைதிகளே இநதிய அமைதிப்படையின் பொறுப்புக்கு மாற்ற உத்தரவு பெற உள்ளதாகவும் றொட்றிக்ஸ் கோரினுர்.

ஜயரத்தின பிடிவாதம் காட்டியதற்கு "உங்கள் விமானத்தை பறக்க விடமாட்டோம். எங்கள் கவச வாகனங்களே முன்னுல் நிறுத்துவோம்" என றொட்றிக்ஸ் ஆத்திரத்துடன் கூச்சலிட்டார். "அப்படியாயின் அவற்றைச் சுட்டுத் தள்ளுவோம்" என ஜயரத்தின உறுமினுர்.

ஆயினும் ஜயரத்தின கொழும்புடன் தொடர்பு கொண்ட போது கட்டளேக்கு கீழ்ப்படியும்படியும் இரண்டு மணி நேரத்தில் கைதிகளே அனுப்பா விட்டால் பொறுப்புகளே அடுத்தவரிடம் ஒப்படைத்து விட்டு கைதியாகி வரும்படி உத்தரவு இடப்பட்டது.

ஜெயரத்தின தனது 34 அதிரடிப்படையினரை புலிகள் சயனேட் கடிக்காமல் தடை செய்ய வைத்திருந்ததுடன் அம்புலன்ஸ், டாக்டர்கள் ஆகியோர் தயார் நிலேயில் இருந்தனர்.

இந்த அதிகாரி புலிகள் இருந்த இடத்துக்கு செல்ல அவர்கள் சயனேட் அருந்தினர். புலேந்திரன், குமரப்பா உட்பட ஏழு பேர் உடனடியாக மரணமாகினர். நாலு பேர் வைத்தியசாலேயிலும் மரணமாகினர். நாலுபேர் காப்பாற்றப்பட்டனர்.

The Broken Palmyrah என்ற நூலில் இருந்து மேற்படி தகவல் பிரசுரமாகிறது. சில சந்தேகங்களும் கிளப்பப்படுகின்றன. திலிபனே மரணிக்க செய்து பொதுமக்களின் உணர்ச்சிகளே இந்திய இராணுவத்துக்கு எதிராக கிளப்பிய புலிகள் கைது செய்யப்பட்டு காவலில் இருநத தமது சகாக்களே மீடக இநதிய இராணுவத்துடன் எந்த வித ஒத்துழைப்பும் கொடுக்கவில்லே. மாறுக இலங்கை சிங்கள இராணுவத்தின் அனுசரணேயுடன் சென்று பதினேழு பேரையும் பார்வையிட்டதோடு, சயனேட்டை அருந்தும்படி கட்டளேயும் இடடுள்ளனர். தங்கள் ஆட்களேயே கொல்ல முயன்ற இந்த வீரபபுலிகள் இதன் மூலம் இந்திய இராணுவத்தை இக்கட்டான நிலேக்கு தள்ளியுள்ளனர். கொழும்பு போவதால் இநத புலிகள் மரணமடையப் போவதில்லே என்பது எல்லோருக்கும் தெரியும். கடநத ஜுன் கிழககில் சண்டை மூண்ட பின்பே யோகி கட்டுநாயக்காவில் இருந்து ஹாயாக இலங்கை இராணுவ விமானத்தில் பலாலி வநதார். இவரைக் கைது செய்ய இலங்கை அரசு முயலவே இல்லே. இப்படியாக தமது முக்கியமானவர்களேப் பலி கொடுத்தாவது இநதிய இராணுவத்தை இக்கடடில் மாடடி விட புலிகள் முயன்றுள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது. இவர்களின் இந்த முயறசிக்கு இலங்கை அரசின் உயர்பீடம் புலிகளுக்கு பூரண ஒத்துழைப்பும் வழங்கியுள்ளது தெளிவாகியுள்ளது.

சமாதான முயற்சிகளே புலிகள் ஆதரவு கொடுப்பதை விட இலங்கை அரசுடன் வேறு விடயங்களுக்கு (அது பணமாக இருககலாம்) ஒத்துழைத்து இலங்கையில் ஐ.தே.க அரசை நிலேபெற உதவியுள்ளனர். தற்போதைய போர் புலிகளின் பலத்தை குறைகக நடந்ததே ஒழிய வேறு எதற்கும் இல்லே. புலி அரசு நட்பு தொடரும்.

உயிர் தப்பிய மற்றைய நான்கு புலிகளின் பெயர் , ஊர் விபரங்கள் புலிகளால் அல்லது அவர்களின் வெளிநாட்டு ஏஜண்டுகள் வெளியிடாத மர்மம் என்ன? இனியாவது வெளியிடுவார்களா? அலலது அவர்களேயும் வீர மரணம் அடையச செய்வார்களா?

குரும்பை சீவரத்தினம்

## தலேவர் பற்றி விசாரித்தால் தர்ம அடி

கொழும்பு

புலிகளின் தலேவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறுரா என்று யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களே சந்தேகப்படுவதாகவும் புலிகளிடம் பிரபாகரன் பற்றி விசாரித்தோர் "தர்ம அடி" வாங்கியதாகவும் கொழும்பு வந்த சிலர் கூறியுள்ளனர். அரச தரப்பில் பிரபாகரன் உயிருடன் இல்லே என்று கூறப்பட்டு வருவது தெரிந்ததே. ஆயினும் சமீபத்தில் வல்வெட்டித்துறையில் நடந்த குமரப்பா, புலேந்திரன் ஆகியோரின் அஞ்சலிக் கூட்டத்திலும் பிரபாகரனின் பெயரில் அறிக்கை மாத்திரம் வாசிக்கப்பட்டது. சந்தேகங்களே மேலும் வளர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களில் விடுதலேப் புலிகளின் பத்திரிகைகளில் மாத்தயாவுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுவதும் அவருடைய அறிக்கைகளே வெளியிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

EPIC (U.K. Branch)
. B M BOX 1738
LONDON WC1N 3XX

தாயகம்
12. 11. '90

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்